மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெள்ளம் பாதிக்கப்பட்ட நேரத்திலே இறந்ததாகச் சொல்கிறார். மாண்புமிகு முதல்வரோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சரின் நிவாரண நிதியிலேயிருந்து ஏதாவது கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி (குறுக்கீடுகள்) ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுக்கப்பட்ட நிதியைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஜெயக்குமார் என்கிற மாணவர் குடும்பத்திற்கும் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

4. கவன ஈர்ப்பு

கடையநல்லூர் நகராட்சி, சொத்து வரி உயர்வினால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் மிக அதிகமாக சொத்து வரி விதிக்கப்படுவது குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் மிக அதிகமாக சொத்து வரி விதிக்கப்பட்டுள்ள சூழ்நிலை' குறித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமான விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

2009 பிப்ரவரி 26] [திரு. மு.க. ஸ்டாலின்]

அறிக்கை

"அரசு ஆணை நிலை எண் 150, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12–11–2007–ன்படி, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் 1–4–2008 முதல் பொது சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு ஆணை நிலை எண் 110, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23–6–2008–ல், தற்போதுள்ள சொத்து வரியில் குடியிருப்புக் கட்டடங்களுக்கு 25 சதவீதத்திற்கு மிகாமலும், தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு 100 சதவீதத்திற்கு மிகாமலும் மற்றும் வணிகக் கட்டடங்களுக்கு 150 சதவீதத்திற்கு மிகாமலும், சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கி தெளிவுரை வழங்கப்பட்டது.

இந்நிலையில், கடையநல்லூர் நகர்மன்றத் தீர்மான எண் 718, நாள் 29–5–2008–ன்படி, குடியிருப்புக் கட்டடங்களுக்கு 25 சதவீதமும், தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு 100 சதவீதமும், வணிகக் கட்டடங்களுக்கு 150 சதவீதமும் வரி சீராய்வு (வசூல்) செய்யத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சிறப்பு அறிவிப்புகள், வரி விதிப்புதாரர்களுக்குச் சார்வு செய்யப்பட்டு, வரி உறுதி செய்யப்பட்ட நிலையில், தெளிவுரைகள் வழங்கப்பட்ட அரசாணை நிலை எண் 110, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23–6–2008–ஐ மன்றம் பதிவு செய்து, உயர்த்தப்பட்ட வரி விகிதத்தை மன்றம் ஏற்று, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்நிலையில், 19–12–2008 ஆம் நாளிட்ட நகர்மன்றத் தீர்மானம் எண் 991–ல் குடியிருப்புக் கட்டடங்களுக்கு 10 சதவீதமும், வணிகம் மற்றும் தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு 50 சதவீதமும் வரி உயர்வு செய்யப்படும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சதவீதத்தினைக் குறைத்து, தற்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவு 78(3)–ன்படி, சிறப்பு அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டு, வரி வசூல் பணி நடைபெற்றுவருவதால், அந்த நிதி ஆண்டில் வரியைக் குறைக்க மன்றம் தீர்மானம் நிறைவேற்ற இயலாது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

[2009 பிப்ரவரி 26

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுடைய, அதிலும் குறிப்பாக, நகர்மன்றங்களுடைய வருவாயைப் பெருக்குகின்ற வகையிலே, கடந்த சில ஆண்டுகளாகச் சொத்து வரி சீராய்வே செய்யப்படாத காரணத்தினால், கடந்த 12-11-2007 ஆம் நாள் அரசாணையின்படி, அரசு ஓர் உத்தரவிட்டு, நகர்மன்றங்கள் விதித்துவந்த சொத்து வரியைக் கூட்டுவதற்காக—அதாவது, குடியிருப்புக் கட்டடங்களுக்கு 25 சதவீதத்திற்கும், தொழிற்சாலைக் கட்டடங்களுக்கு 100 சதவீதமாகவும், வணிகக் கட்டடங்களுக்கு 150 சதவீதமாகவும், தீர்வையை, வரியை வசூல் செய்ய வேண்டுமென்கிற உத்தரவினை அரசு வழங்கியபோது, நகர்மன்றங்கள் அதற்கான தீர்மானங்களை முன்மொழிந்தன. ஆனால், பொது மக்கள் மத்தியிலும், பொது நல ஆர்வலர்கள் மத்தியிலும், இந்தச் சீராய்வு மிக அதிகமாக இருக்கிறது என்கிற கோரிக்கை அரசுக்கு வந்ததன் காரணமாக, அரசு மீண்டும் ஒரு விளக்கத்தினை வெளியிட்டது. அதாவது, 25 விழுக்காடு என்பதோ அல்லது 100 விழுக்காடு என்பதோ அல்லது 150 விழுக்காடு என்பதோ நிர்ணயிக்கப்பட்டதல்ல; அதுவரை அதை ஒரு எல்லையாக வைத்து நகர்மன்றங்களே அந்தத் தீர்வையை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்கிற ஒரு விளக்கத்தையும் அரசு வெளியிட்டது. ஆனால், 24 நகர்மன்றங்கள், அதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல், மீண்டும் அதைப்போலவே, அதாவது, வீட்டு வரி 25 சதவிகிதம், தொழிற்சாலைக் கட்டடங்கள் 100 சதவிகிதம், வணிகக் கட்டடங்கள் 150 சதவிகிதம் என்று தீர்மானம் போட்ட காரணத்தினால், தீர்மானம் போட்டதோடு மட்டுமல்லாமல், அவைகளில் சில அதற்கான அறிவிப்புகளையும் செய்துவிட்ட காரணத்தினால், அந்த 24, 25 நகராட்சிகளுக்கு மட்டும் தீர்வையினுடைய, சொத்து வரியினுடைய விகிதாச்சாரத்தில் வித்தியாசமாக இருக்கிறது.

பிற்பகல் 12-30

உதாரணமாக, ஒரு மாவட்டத்தில் இருக்கிற நகர்மன்றங்களிலே, ஒரு சில நகர்மன்றங்களிலே 10 விழுக்காடு மட்டும்தான் கூட்டியிருக்கிறார்கள். ஆனால், என்னுடைய சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த கடையநல்லூரிலே, அதை 25 சதவிகிதமாக, 100 சதவிகிதமாக, 150 சதவிகிதமாக உயர்த்திய காரணத்தினால் பொது மக்கள் போராட்டம் முதலியவற்றை நடத்தி, நகர்மன்றம் மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, வீட்டுத் தீர்வையை, வீட்டு வரியை 10 சதவிகிதமாகவும், தொழில்

2009 பிப்ரவரி 26] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு 50 சதவிகிதமாகவும் கூட்டித் தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானத்தை அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது. நகராட்சி நிருவாக ஆணையாளர் அலுவலகத்திலே அதற்கான ஒப்புதலை வழங்கவில்லை. எனவே, நானே நேராகச் சென்று, நகராட்சி நிருவாக ஆணையாளரைச் சந்தித்து, இதுசம்பந்தமாக என்ன செய்வதென்று கேட்டேன். அவர்கள், அந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டுவிட்டால் அதை மாற்றுவதற்கான அதிகாரம் இல்லை; அதே வரியைத்தான் வசூலிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். நான், பின்னர் நகராட்சி நிருவாகத் துறைச் செயலாளர் அவர்களைச் சந்தித்தேன். அவர்களும் சொல்லிவிட்டார்கள். கடைசியிலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலாவது இதற்கு ஒரு மறு சீராய்வு நடத்தப்பட்டு, இந்த வரி விதிப்பைக் குறைக்க முடியுமா என்று நான் கோரிக்கை வைத்தேன். ஆனால், அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற பதில், இந்த ஆண்டு அதைச் சரி செய்ய முடியாது. அதை இதேபோன்றுதான் வசூலிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதில் இருக்கிற நிருவாகச் சிக்கலை நான் உணர்ந்துகொள்கிறேன். அடுத்த வரி விதிப்புக்காவது அந்த வரி விதிப்புக்கான சீராய்வை ஏற்றுக்கொண்டு, கடையநல்லூர் நகர்மன்றம் போட்டிருக்கிற தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிவதோடு, அந்த 25 விழுக்காடு, 100 விழுக்காடு, 150 விழுக்காடு என்பது அநேக இடங்களிலே மிகத் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நான் ஒரு 500 வரி விதிப்புகளினுடைய பட்டியலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். 14 ரூபாய் முன்னால் இருந்த வரி, இப்பொழுது 25 விழுக்காடு என்று சொன்னால் ஏறக்குறைய 32 ரூபாய்தான் வரி விதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 265 ரூபாய் விதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல 33 ரூபாய் வரி இருந்தவர்களுக்கு 10 மடங்கு, அதாவது 1,000 விழுக்காடு கூட்டி, 303 ரூபாயாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. 456 ரூபாய் வரி விதித்தவர்களுக்கு 16,224 ரூபாய் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த 500 பேருடைய நிலைமையைப் பரிசீலனை செய்து, இதில் எங்கே தவறு இருக்கிறதென்பதை ஆராய்வதற்கு அரசு முயற்சி எடுத்து, அவர்களுக்காவது இந்த ஆண்டே ஒரு நிவாரணம் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை உங்கள்மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்து வரி பொதுச் சீராய்வு, அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் அமல்படுத்துவதற்கு முன்பே, கடந்த 2007–2008 ஆம் ஆண்டிலேயே, சுமார் 500 இடங்களில் கூடுதலாக கடையநல்லூர் நகராட்சியில் வரி விதிக்கப்பட்டது என்றும், அதற்கான அறிவிப்புகூட முறையாகச் சார்வு செய்யப்படவில்லை என்றும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தினை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அது உண்மைதான். ஆனால், தற்போதைய பொதுச் சொத்து வரிச் சீராய்வுக்கு முன்பே, அதாவது, 2007–2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிகழ்ந்ததாகும் அது. எனவே, இதுகுறித்து விரிவாக விசாரித்து மேல் நடவடிக்கை தொடர, அரசு ஓர் அலுவலர் குழுவினை நியமிக்க உத்தேசித்திருக்கிறது. அந்தக் குழு, அவர் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய அடிப்படையில் கடையநல்லூர் நகராட்சிப் பகுதியைத் தல ஆய்வு செய்தபின்னர், அளிக்கக்கூடிய விரிவான அறிக்கையின் அடிப்படையில் அரசு மேல் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சிக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மறு சீராய்வு அல்லது அந்த அலுவல் சார்ந்த குழு, தலத் தணிக்கையை முடித்து, அதற்கான வரியை நிர்ணயம் செய்கின்றவரை, தற்போது இருக்கின்ற வரியைக் கட்டுவதற்கு நம்முடைய அரசு அனுமதிக்க முன்வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்து வரிச் சீராய்வின்போதே பழைய வரியினை

2009 பிப்ரவரி 26] [திரு. மு.க. ஸ்டாலின்]

வசூலிக்க நகராட்சிச் சட்டத்தில் வழிவகை இல்லை. இருப்பினும் இந்த நிகழ்வு சீராய்வு அல்ல. தவறு மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதற்கான திருத்தமே என்ற அடிப்படையில் உறுப்பினர் கூறக்கூடிய சொத்து வரி கேட்பு இனங்களுக்கு மட்டும் பழைய வரி வசூலித்துக்கொள்ள அறிவுரை வழங்கப்படும். குழுவின் அறிக்கைக்குப் பின் நிலுவைத் தொகை வசூல் செய்யப்படும். இதுதவிர, அரசாணை எண் 110, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23-6-2008-இல் சொத்து வரிச் சீராய்வு குறித்து அந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றமே, அதன் வருவாய் மற்றும் செலவினங்களைக் கருத்திலேகொண்டு அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய உயர்வு சதவீதத்திற்குள் இருக்கும்படி தீர்மானித்துக்கொள்ளலாம் எனத் தெளிவுரை வழங்கிய பின்னர், அந்தந்த நகரமன்றங்கள் வரி உயர்வு குறித்து உரிய தீர்மானங்கள் இயற்றி இருக்கின்றன. முறையாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னரும், பல நகராட்சிகளிலிருந்து சொத்து வரி குறைப்பது குறித்து மீண்டும் மீண்டும் கோரிக்கைகள் பெறப்பட்டுக்கொண்டிருக்கின்றன. சொத்து வரிமூலம் கிடைக்கப்பெறும் வருவாய்தான் நகராட்சியினுடைய முக்கிய வருவாயாக அமைந்திருக்கிறது என்பது உறுப்பினர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். நகராட்சிகளில் பல்வேறு அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளுக்கு அரசு பெருமளவில் நிதி உதவி செய்தாலுங்கூட, நகராட்சிகளும் தன்னுடைய பங்குத் தொகையாக தோராயமாக 30 சதவீதம் பங்களிப்பு செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. மேலும் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தும் நேர்வில், ஊதிய செலவினம் சுமார் 25 சதவீதம் கூடிவிடும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இந்த நிலையில் மாதா மாதம் நகராட்சிப் பணியாளர்களுக்குச் சம்பளம் வழங்கவும் பல்வேறு அடிப்படை வசதிகளை மேற்கொள்வதும் மிக மிகக் கடினமாக அமைந்திருக்கிறது. இந்த நிலையில் சொத்து வரியினைக் குறைத்து வசூலிக்கும்பட்சத்தில் நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்ற அந்த விவரமும் இந்த அவையிலே தெரிவிக்கப்படுகிறது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஒ) மேலூர் தொகுதி, அரசு விழாவில் உரிய சட்டமன்ற உறுப்பினரை அழைத்து நலத் திட்ட உதவிகள் வழங்காமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.